
# திராவிடத்தால் வாழ்கிறோம்

837

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

**தமிழ்.கா.அமுதரசன்**

4

**கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!**

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்!




2000-வது ஆண்டு அக்டோபர் 9-ம் தேதி 'டான்சி நில ஊழல்' வழக்கில் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா ஆகியோருக்கு 3 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தது, சென்னை சிறப்பு நீதிமன்றம். தனி நீதிமன்றம் அளித்த தண்டனையால், ஜெயலலிதா தேர்தலில் நிற்க முடியாத நிலை உருவானது. அவரது அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியானது. ஏனென்றால், ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றவர்கள் அடுத்த 6 ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிட முடியாது.

அந்தத் தீர்ப்பு, அன்றைக்கு மட்டும் பரபரப்பை ஏற்படுத்தவில்லை. தமிழ்நாட்டின் அரசியலில் இன்றுவரை அ.தி.மு.க. உருவாக்கிக் கொண்டிருக்கும் பல பரபரப்புகளுக்கும் காரணமாக அமைந்தது. 2001-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை, ஜெயலலிதாவுக்கு ஏற்பட்டது.

அதை மறைக்க, 4 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்தார். ஆண்டிப்பட்டி, கிருஷ்ணகிரி, புவனகிரி, புதுக்கோட்டை ஆகிய நான்கு தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்தார்.

இரண்டுக்கும் மேற்பட்ட தொகுதிகளில் போட்டியிடுகிறவர்களின் வேட்புமனுக்கள், தள்ளுபடி ஆகிவிடும். அந்த அடிப்படையில் தனது மனு தள்ளுபடி செய்யப்படும் என்பதுடன், அதன்மூலம் தன் மீதான ஊழல் வழக்கையும் தண்டனையையும் மறைக்க நினைத்தார். ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ், 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற அடிப்படையில், ஜெயலலிதாவின் நான்கு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன. அதேநேரத்தில், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு-33(7)(பி)-ன்படி வேட்பாளர் ஒருவர் அதிகபட்சம் இரண்டு தொகுதிகளில் மட்டுமே போட்டியிட வேண்டும். இச்சட்டத்தை மீறியதால், ஜெயலலிதா மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் புதியதாக வழக்கு தாக்கல் செய்தது கழகம்.

ஆனால், அந்த ஆண்டுத் தேர்தலில் அ.தி.மு.க. வென்ற நிலையில், எம்.எல்.ஏ. ஆகாமலேயே முதலமைச்சராகப் பதவியேற்றார் ஜெயலலிதா. அரசியலமைப்பு விதிகளையும் மீறி அவருக்கு, அன்றைய கவர்னர் பாத்திமா பீவி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அதனை எதிர்த்தும் கழகத்தின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

## முதலமைச்சரானது தவறு!

அதற்கிடையில், "மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி, ஜெயலலிதா தமிழக முதலமைச்சரானது தவறு. அவரை கவர்னர் பாத்திமா பீவி, முதல்வராகப் பதவியேற்க அழைத்தது தவறு. அதனால் ஜெயலலிதா முதல்வரானதை ரத்து செய்யவேண்டும்" என்று வழக்கறிஞர்கள் மனோகர் லால் சர்மா மற்றும் கபூர் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர்.

'எம்.எல்.ஏ. ஆக முடியாத ஒருவர் எப்படி முதலமைச்சர் ஆக முடியும்?' எனக் கேட்டு, ஜெயலலிதாவின் முதல்வர் பதவியை 2001-ஆம் ஆண்டு செப்டம்பர் 21-ஆம் தேதி பறித்து உத்தரவிட்டது உச்சநீதிமன்றம்.

உச்சநீதிமன்றம் கடுமையாகக் கண்டித்த நிலையில், முதலமைச்சர் பதவியில் இருந்து விலகிய ஜெயலலிதா, அதுவரை, தமிழ்நாட்டு அரசியலில் இல்லாத வகையில் ஒரு பொம்மை முதலமைச்சராக ஓ.பன்னீர்செல்வத்தை அமர்த்தினார்.

அதேநேரத்தில், ஜெயலலிதா டான்சி வழக்கை நீர்த்துப்போகச் செய்யும் வேலைகளிலும் இறங்கினார். தனி நீதிமன்றம் அளித்த தீர்ப்புகளை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்த மேல்முறையீடுகளின் மூலம் வழக்கை நீர்த்துப்போகச் செய்யும் பல வாதங்களை முன்வைத்தார்.

வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றத் தீர்ப்புக்குத் தடை விதித்தது. ஆனால், தண்டனையை ரத்து செய்யவில்லை. பின்னர், 2003-ஆம் ஆண்டு இவ்வழக்கில் இருந்து ஜெயலலிதா உள்ளிட்டோரை விடுதலை செய்து சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஜெயலலிதா சார்பில், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கலான அப்பீல் மனுவை விசாரித்த நீதிபதி, ஜெயலலிதா மற்றும் சசிகலாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து இருவரையும் விடுவித்தார். இதையடுத்து, ஜெயலலிதா மீண்டும் முதல்வர் பதவியேற்றார்.

> **இந்த வழக்கின் பல்வேறு காலகட்டங்களில் ஜெயலலிதா மேற்கொண்ட நடவடிக்கைகள் பலவும், அரசியல் கேலிக்கூத்தாக அமைந்தன.**

ஆனாலும், தீர்ப்பை ரத்து செய்ய வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் மேல்முறையீடு செய்தார்கள். அதேநேரத்தில், ஜெயலலிதாவின் விடுதலையை எதிர்த்து, முதல்முறையாக டான்சி நில ஊழல் தொடர்பாக புகார் கொடுத்தவர் என்ற அடிப்படையிலும், சம்பந்தப்பட்ட டான்சி நிலம் உள்ள சென்னை, ஆலந்தூர் நகராட்சித் தலைவர் என்ற முறையிலும் கழகத்தின் வழக்கறிஞர் பிரிவுச் செயலர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தார்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.ராஜேந்திர பாபு, பி.வெங்கட்ராம ரெட்டி ஆகியோர் கொண்ட அமர்வு விசாரித்து ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோரை விடுவித்து, 2003-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தீர்ப்பளித்தது.

## சர்ச்சையை உருவாக்கிய தீர்ப்பு!

ஒட்டுமொத்த இந்தியாவும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அந்தத் தீர்ப்பு பல சர்ச்சைகளை உருவாக்கியது. குறிப்பாக, தீர்ப்பின்போது, நீதிபதிகள் கூறியவை பெரும் விவாதங்களை ஏற்படுத்தின. அவை இன்றளவும் பேசுபொருளாக உள்ளன. நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், 'தேர்தல் நடத்தை விதிகளை மீறியது சரியா, இல்லையா என சிந்தித்துப் பார்க்க வேண்டும்' என ஜெயலலிதா தரப்பிடமே கேட்டனர். அதுமட்டுமில்லாமல் டான்சி சொத்தைத் திருப்பி ஒப்படைக்கும்படியும், நீங்கள் செய்த காரியத்துக்காக மனசாட்சிப்படி பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும் என்றும் நீதிபதிகள் அறிவுறுத்தினர். சட்டத்தின்படி தீர்ப்பளிக்க வேண்டிய நீதிபதிகள், ஜெயலலிதா தன் மனசாட்சிப்படி நடந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியது விசித்திரமாக இருந்தது.

இந்த வழக்கின் பல்வேறு காலகட்டங்களில் ஜெயலலிதா மேற்கொண்ட நடவடிக்கைகள் பலவும், அரசியல் கேலிக்கூத்தாக அமைந்தன. அதேநேரத்தில், எந்த இடத்திலும் பின்வாங்காமல், வழக்கில் தண்டனையைப் பெற்றுத் தந்து, அரசியலமைப்புச் சட்டத்தை உறுதி செய்தது கழகத்தின் சட்டப் போராட்டம். டான்சி நிலம் திரும்பவும் அரசு நிறுவனமானது.

இன்று, டான்சி நிறுவனம், லாபகரமாக இயங்கும் அரசு நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. கடந்த பத்து ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கைவிடப்பட்ட அரசு நிறுவனமாக கண்டுகொள்ளப்படாமல் இருந்த நிலையில், 2021-ஆம் ஆண்டு முதல் திராவிட மாடல் ஆட்சிக் காலத்தில், நிறுவனத்துக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது. தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, பொதுமக்களுக்கான விற்பனையிலும் டான்சி ஈடுபட்டுள்ளது. குறிப்பாக, தற்போது பத்து கோடி ரூபாய் லாபம் ஈட்டும் நிறுவனமாகவும், 'நம்ம ஸ்கூல்' திட்டத்துக்கு 4 கோடி ரூபாய் நன்கொடை அளித்த நிறுவனமாகவும் உள்ளது.

ஜெயலலிதாவின் ஆணவத்தைத் தடுத்து நிறுத்திய வழக்காக மட்டுமல்ல, அரசு நிறுவனத்தைக் காப்பாற்றிய வழக்காகவும் 'டான்சி நில ஊழல் வழக்கு' இன்று அடையாளம் பெற்றுள்ளது. கடந்த 25 ஆண்டுகால அ.தி.மு.க. அரசியல் சதிகளுக்கு டான்சி வழக்கு தொடக்கப்புள்ளி. "ஆம்; அரசு நிலத்தை வாங்கினேன்" என்ற ஆணவத்துக்கு விழுந்த முற்றுப்புள்ளி.

**...தொடரும்**

---

## அரசு மருத்துவமனைகளைப் பயன்படுத்துங்கள்!

சென்னை உயர்நீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசின் கூடுதல் வழக்கறிஞராகச் செயல்படும் ஜீவா கிரிதரன் அரசு மருத்துவ மனைகளின் திறன்மிக்கக் கட்டமைப்புகள், அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் குறித்து, சொந்த அனுபவத்தில் இருந்து ஓர் பதிவை எழுதியுள்ளார்.

அதில் இருந்து:

"டிசம்பர் மாதம் நீதிமன்றத்துக்குச் செல்லும் வழியில், விபத்தில் சிக்கி, ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, ஒரு மாதத்துக்குப் பிறகு மீண்டேன். பிப்ரவரி 23-ஆம் தேதி டெல்லியில் நடந்த மாரத்தானில் பங்கேற்று 10 கி.மீ. தொலைவை 6-நிமிடங்களில் ஓடிக் கடந்தேன். ஃபீனிக்ஸ் பறவை போல மீண்டெழுந்ததாக அதைக் கருதினேன். ஆனால், 'தலைவலி, பார்வைப் பிரச்சினை போன்றவை 3 மாத காலத்திற்குள் உடனே வரும்' என்று மருத்துவர்கள் அப்போதே அறிவுறுத்தியிருந்தனர். சரியாக 90-வது நாள் நடுஇரவில், தலை சுக்குநூறாக வெடிப்பது போல ஒரு வலி.

விடிந்ததும், ஓமந்தூரார் அரசு மருத்துவமனைக்கு ஓடினேன். மூளையில் ஏறக்குறைய 100-மிலி இரத்தம் வழிந்து உறைந்திருப்பதாகவும், உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றும் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். சிகிச்சையின் தீவிரம் குறித்து, மருத்துவர்கள் சொன்னதைக் கேட்டு, மனைவியும் மகனும் உறைந்து போயினர். தனியார் மருத்துவமனைக்குப் போய்விடலாமா என பலரிடம் ஆலோசனை கேட்டுள்ளனர். "இன்றைய நிலையில் தமிழ்நாட்டிலேயே இந்த அறுவைச் சிகிச்சை செய்ய மிகத் திறமையான மருத்துவர்கள் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் மட்டும்தான் உள்ளனர். வேறு எங்கும் மாற்றி விடாதே" என்பதுதான் அனைவரின் பதிலும்.

2 மணி நேரத்திற்கும் மேல் அறுவை சிகிச்சை நடந்தது. 10 நாட்கள் ஐ.சி.யூ.வில் இருந்தேன். 6 வாரங்கள் படுக்கையிலேயே இருக்க வேண்டுமென்ற அறிவுறுத்தலுடன், வீட்டுக்கு அனுப்பப்பட்டேன். நம் அரசு மருத்துவமனைகள் பிரபல தனியார் மருத்துவமனைகளை விட, பலமான கட்டமைப்புகளைக் கொண்டுள்ளன. திறமைமிக்க மருத்துவர்கள் உள்ளனர். தனியார் மருந்துவமனைகளுடன் ஒப்பிட்டு, அவற்றை அலட்சியப்படுத்தாதீர்கள்.... உபயோகப் படுத்துங்கள்" என நெகிழ்ச்சியுடன் பதிவிட்டுள்ளார்.

---

## ஃப்ளாஷ்பேக்





செ.இளங்கோவன்

### தலைவர் அளித்த பாராட்டும் ஊக்கமும்...

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்குகொண்டவன் நான், 2001-ஆம் ஆண்டு அன்றைய கழகத்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அராஜக அரசால் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, சென்னையில் கண்டன பேரணி நடைபெற்றது. அதில் பங்கேற்று காவல் துறையால் கடுமையாகத் தாக்கப்பட்டேன். அடுத்த சில மாதங்களில் மதுரைக்கு வருகை தந்த தளபதி அவர்களை நேரில் சந்தித்து, பாராட்டும் வாழ்த்தும் பெற்றேன். இன்று, என் மகன் இ.முத்துச்செல்வம் கழக இளம்பேச்சாளராக கழகப் பணியாற்றி வருவது பெருமிதம் அளிக்கிறது.

**– செ.இளங்கோவன், துணை அமைப்பாளர், நகர இலக்கிய அணி, போடிநாயக்கனூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## கருவூலம்

### 'துணை நிற்க வேண்டும்!'

1967-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 6-ஆம் தேதி, தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பேரறிஞர் அண்ணா, அரசு ஊழியர்களிடையே அறிவுரையாற்றினார். "தமிழ்நாடு நிர்வாகத்தில் முதலிடம் பெறும் வகையில், நிர்வாகச் சிறப்பு ஒரு துளியும் மங்காமல் செயல்படுவீர்கள். நாட்டிலிருக்கும் ஏழ்மை, இல்லாமை, போதாமை அகற்றுவதில், எங்களுடன் நீங்களும் சேர்ந்து துணை நிற்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No. 1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131